தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – ஐப்பசி 23

2010 நவம்பர் 9, செவ்வாய்க்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்றம்–தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்"

பசியைப் பொறுத்துக்கொள்ளும் நோன்பைக் கடைப்பிடிப்பதைவிடப் பசித்திருக்கும் ஒருவருக்கு உணவு அளிப்பதே சிறந்ததாகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள்.* வினா *வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ.* முல்லைவேந்தன், *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*

1—

துணை மின் நிலையம்

***103736—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியில் 110 K.V. *துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

[2010 நவம்பர் 9

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறாரோ அப்போதெல்லாம் வேளாண்மைத் துறையில் ஒரு புரட்சியை உருவாக்குகிற வகையில், இலவச மின்சாரம் வழங்குவதாக இருந்தாலும், ரூ.7,000 கோடி கடனை தள்ளுபடி செய்வதாக இருந்தாலும், அதேநேரத்தில் இன்றையதினம் புதிதாக மின் இணைப்பு வேண்டுமென்று கோரி இலட்சக்கணக்கானவர்கள் காத்துக்கிடக்கிற அவல நிலையைப் போக்குவதற்காக உடனடியாக 2 இலட்சம் புதிய மின் இணைப்புகளை வழங்குவதற்கான அறிவிப்புகளை வெளியிடுவதாக இருந்தாலும், பழைய மோட்டார்களை எல்லாம் மாற்றி புதிய மோட்டார்களை வழங்குவதாக இருந்தாலும் இந்தியாவுக்கே வழிகாட்டுகிற வகையில் செய்கிறார்கள். இவற்றுக்கெல்லாம் நன்றி சொல்லாவிட்டால் நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கமாட்டோம் என்ற வகையில் தமிழக விவசாயிகளின் சார்பாக என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிற அதே நேரத்தில், பாப்பிரெட்டிப்பட்டியில் 110 K.V. துணை மின் நிலையம் வேண்டுமென்பது எங்களது நீண்டநாள் கோரிக்கை. ஆவன செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தாலும்கூட அங்கே தொழிற்சாலைகள் நிறைய இருக்கின்றன. புதிய மின் இணைப்புகள் தர வேண்டியிருக்கிறது. விவசாயத்திற்குத் தட்டுப்பாடு இல்லாத மின்சாரம் மிக இன்றியமையாத தேவையாக இருக்கிற காரணத்தால் நடப்பு ஆண்டிலேயே அந்தத் துணை மின் நிலையத்தை உருவாக்கித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

2010 நவம்பர் 9]

தெரிவித்ததைப்போல பாப்பிரெட்டிப்பட்டியில் 110 K.V. துணை மின் நிலையம் அமைப்பதற்காக டெண்டர்கள் கோரப்பட்டிருக்கின்றன. அந்த டெண்டர், நிதி ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் 11–11–2010. வாரிய அளவிலான ஒப்பந்தப்புள்ளி குழுமத்திடம் ஒப்புதல் பெறும் நாள் 30–11–2010. பணி முடிக்கப்படும் நாள் 30–6–2011.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் மொரப்பூர், பொம்மிடி ஆகிய பகுதிகள் விவசாயிகள் நிரம்ப இருக்கிற பகுதிகள். சில இடங்களில் நூற்பாலைகள் இருக்கிற காரணத்தால் அவற்றுக்கு 24 மணி நேரமும் மின்சாரம் தேவைப்படுகிறது. நீண்ட தூரத்திலிருந்து 30 K.V. துணை மின் நிலையங்களுக்கு மின்சாரம் வருகிற காரணத்தால் மரங்கள் விழுவது அல்லது இயற்கைத் தடைபாடுகள் இருக்கிற காரணத்தால் பழுதுபார்ப்பதற்கு காலதாமதமாகி விவசாயிகளும், தொழில் செய்பவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, மொரப்பூர், பொம்மிடி ஆகிய இரண்டு பகுதிகளில் 110 K.V. துணை மின் நிலையம் அமைப்பதற்கான வாய்ப்பினை அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தருவார்களா? இது எங்களுடைய நீண்டகால கோரிக்கை. அமைச்சரிடமும் நேரிலே வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம். இதற்கான இடங்களையும் தேர்வு செய்திருக்கிறோம். ஆகவே, இதைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அரூர் கோட்ட அலுவலகம், அதேபோல கட்டுமான மேம்பாட்டு அலுவலகம், பயரதத்தில் உதவி செயற் பொறியாளர் அலுவலகம், நீண்டகாலமாக வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அவற்றுக்கும் புதிய கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தப் பகுதிகளில் புதிய துணை மின் நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு நிலம் தேவைப்படுகிறது.

[2010 நவம்பர் 9

தேவையான நிலத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் ஏற்பாடு செய்து தருவாரேயானால் விலையைப் பற்றி கவலைப்படாமல், என்ன விலை வேண்டுமானாலும் கொடுத்து மின்சார இலாகா வாங்கத் தயாராக இருக்கிறது. நிலம் கிடைக்க வாய்ப்பு இல்லை. அதற்கு மாண்புமிகு உறுப்பினர் ஆவன செய்வார் என்று எதிர்பார்க்கிறேன். அடுத்து புதிய கட்டடங்கள் திறப்பது பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி மின்சார வாரியம் பரிசீலித்து ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

முற்பகல் 9–35

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதிக்குட்பட்ட கொளத்தூர் ஒன்றியப் பகுதி முழுவதிலும் விவசாயத்தையே நம்பி வாழக்கூடிய மக்கள் இருக்கிறார்கள். அங்கே மின்சார வாரியத்தில் கொளத்தூர் புறநகர், கொளத்தூர் வடக்கு, தெற்கு ஆகிய 3 பிரிவுகள் உள்ளடங்கியுள்ளன. அங்கு 30 K.V. துணை மின் நிலையம் மட்டுமே இயங்கி வருகிறது. அதனால் விவசாயிகளுக்கு பற்றாக்குறை இருக்கிற நிலை. இவற்றையெல்லாம் அமைச்சர் அவர்களிடத்தில் நேரில் சொன்னோம். சட்டமன்றத்திலும் கேட்ட நேரத்தில், அமைச்சர் அவர்கள் விரைவில் துவக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார்கள். அதுமட்டுமல்ல, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் எங்கள் பகுதிக்கு வந்த நேரத்தில் கேட்டபோதும் உறுதியளித்து விட்டு வந்தார்கள். மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நடப்பாண்டிலேயே விரைவாக நிறைவேற்றித் தருவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

அதோடு வேளாண்மை நமது மாநிலத்தின் ஆதாரத் தொழிலாக இருக்கின்ற காரணத்தினாலே பல்வேறு பிரிவுகளுக்கு மின்சாரத்தில் முன்னுரிமை அளிக்கிற வேளையில், விவசாயத்தைக் கருத்திற்கொண்டு விண்ணப்பித்த அனைவருக்கும் முன்னுரிமை என்று இல்லாமல் எல்லோருக்கும் மின் இணைப்பு வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

2010 நவம்பர் 9]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட முதல் கேள்விக்கு, இந்த ஆண்டே அவர் சொன்ன அந்தப் பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யும். இரண்டாவது கேள்வியாக, விண்ணப்பிக்கப்பட்ட அனைவருக்கும் இலவச மின்சாரம் கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். இதுவரையிலே, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர்தான் 2 இலட்சம் பம்பு செட்டுகள் ஒரே ஆண்டு காலத்திலே கொடுக்க வேண்டுமென்று அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதற்கான நடவடிக்கைகளிலே மின்சார வாரியம் ஈடுபட்டிருக்கிறது. மீதம் 2 இலட்சம் பம்பு செட்டுகள் இருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் 2011 ஆம் ஆண்டு மறுபடியும் 6–வது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அதுவும் பரிசீலிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் பகுதியின் தொழில் வளர்ச்சியின் காரணமாகவும், மக்களுடைய குடியிருப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதன் காரணமாகவும் கூடுதலாக மின் தேவை அதிகரித்து இருக்கிற சூழ்நிலையில் ஏற்கெனவே, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அங்கே கூடுதலாக துணை மின் நிலையம் வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தபோது அதை ஏற்று 8 துணை மின் நிலையங்களுக்கு அனுமதி வழங்கியது தலைவர் கலைஞருடைய அரசு. ஆனால், அதை நடைமுறையில் நிறைவேற்றுவதற்குப் போதுமான இடவசதி இல்லை. அரசாங்க இடமோ அல்லது அரசு சார்ந்திருக்கக்கூடிய புறம்போக்கு நிலங்களையோ பார்க்கிற காரணத்தினால், அங்கே அந்த இடம் இல்லாத காரணத்தினால், அறிவிக்கப்பட்டும் துணை மின் நிலையங்கள் அமைவதிலே காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. இப்போது நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இடம் இருந்தால் எவ்வளவு விலை கொடுத்து வேண்டுமானாலும் வாங்கலாம் என்ற ஒரு நல்ல செய்தியைத் தெரிவித்திருக்கிறார்கள்.

தனியார் நிலத்தை சந்தை மதிப்பிலேதான் அங்கே வாங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அந்த விலையைக் கொடுத்து வாங்கி ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு நிலுவையிலுள்ள அந்த 8 துணை மின் நிலையங்களையும் அமைத்துத் தர மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் நிலத்தை சந்தை விலைக்கு வாங்கித் தருவதற்கு முன்வருவார்களேயானால், மின்சார வாரியம் அந்த நிலத்தை வாங்கி துணை மின் நிலையம் உடனடியாகக் கட்டித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி.

திரு. மு. பரஞ்ஜோதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் தொகுதி, திருவானைக்காவல் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்காக திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரி கோயிலுக்குரிய இடம் தேர்வு செய்யப்பட்டு, அந்த இடத்தை இன்னும் மின்வாரியம் பெறமுடியாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. இந்தக் கேள்வியை நான் 2008 ஜனவரி மாதம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்கின்ற நேரத்தில், எவ்வளவு விலை கொடுத்தாகிலும் அதை வாங்கி துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். எனவே, இந்து அறநிலையத் துறைக்கு உரிய அந்த இடத்தைப் பெற்று உடனடியாக ஸ்ரீரங்கம் தொகுதி, திருவானைக்காவல் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்திற்கேற்ப அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலத்தை

2010 நவம்பர் 9]

துணை மின் நிலையங்கள் கட்டுவதற்காகக் கேட்கும்போது, சந்தை விலைக்கு கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அதை உடனடியாக ஏற்று அந்த நிலத்தை வாங்கிக்கொள்கிறோம். ஆனால் சில நேரங்களில் அறநிலையத் துறையைச் சேர்ந்தவர்கள் இரண்டு மடங்கு சந்தை விலை வேண்டும் என்று கேட்கிறார்கள். அதனால் சில இடங்களில் நிலம் வாங்க முடியாமல் இருக்கிறோம். எனவே, இந்தத் துறை அறநிலையத் துறையோடு பேச்சுவார்த்தை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் 9–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் துறையைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறது நம்முடைய தமிழக அரசு. 2003–ல் மத்திய அரசு இயற்றிய சட்டத்தின் பிரகாரம், தமிழ்நாடு மின்சார வாரியம் Generation, Transmission and Maintenance என்று பல்வேறு வகையாக பிரிக்கப்படும் என்று சட்டம் இயற்றியது. ஆனால், இதுகாறும் அதை நடைமுறைப்படுத்தாமல் மிக சாமர்த்தியமாக, நல்லவிதமாக எந்தவொரு இடையூறுமின்றி தமிழ்நாடு அரசு இப்போது அதைச் செயல்படுத்தி இருக்கிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் பிரிக்கப்பட்டதன் விளைவாக இருக்கக்கூடிய Pros and Cons — பின்விளைவுகள், முன்விளைவுகள் என்ன என்பதனை சபைக்கு அறிவிக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Subject–ல் என்ன இருக்கிறது? நீங்கள் எதையோ பேசிக்கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தை மூன்றாகப் பிரித்தது குறித்தும், அதனால் ஏற்பட்ட பாதகம், சாதகங்கள் என்ன என்பதனைக் குறித்தும் மாண்புமிகு உறுப்பினர் இராமன் அவர்கள் கேட்கிறார்கள். மின்சார வாரியம் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு தொழிலாளர்கள் யார், யார், எந்த, எந்தப் பிரிவுகளில் பணியாற்ற விருப்பம் தெரிவிக்கிறார்களோ அதற்கேற்ப மின்சார வாரியம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆனால், சில தொழிற்சங்கங்கள்

நீதிமன்றத்திலே முறையீடு செய்திருக்கின்றன. அது நிலுவையிலே இருக்கிறது. நீதிமன்ற உத்தரவு வந்ததற்குப் பிறகு மற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும். எது எப்படியிருந்தாலும், பிரிக்கப்பட்ட மின்சார வாரியம் மூன்று பிரிவுகளாகச் செயல்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டு இதே சட்டப் பேரவையில் நமது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், சிவகங்கை தொகுதி, அரசனூரில் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார்கள். அந்த அடிப்படையில் நிலமும் மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், அந்தப் பணி இன்னும் துவக்கப்படவில்லை. உடனடியாக பணி துவக்கப்பட்டு, துணை மின் நிலையம் அமைக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் ஒன்றியத்தில் சிலுக்கப்பட்டி பகுதியிலும் மற்றொரு துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கையை எடுப்பாரா என்றும் கேட்க விரும்புகிறேன்.

சிவகங்கை மாவட்டத்தில் மின் அழுத்தம் குறைவாக இருக்கிறது. நிறைய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டிருந்தாலும், அந்த மின்மாற்றிகளில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுகிற காரணத்தால், 10 நாட்கள், 15 நாட்கள் என்று தொடர்ந்து அந்தப் பகுதிகளில் மின்சாரம் தடைபட்டு, குடிநீர் தட்டுப்பாடு போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே, அங்கே உபயோகப்படுத்தப்படுகிற மின்மாற்றிகள் தரமுள்ள மின்மாற்றிகளாக இருக்கின்றனவா என்பதை ஆய்வு செய்து voltage அடிப்படையில் சரியான மின்மாற்றிகள் அமைக்கப்படுமா, தொடர்ந்து மின்மாற்றிகள் பழுதில்லாமல் இயங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தில் மாண்புமிகு

2010 நவம்பர் 9]

உறுப்பினர் அவர்கள் அந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிலம் தயாராக இருக்கிறது என்று சொன்னார்கள். நிலம் தயாராக இருந்தால் இந்த ஆண்டே துணை மின் நிலையம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இரண்டாவதாக, அவர் இன்னொரு புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் உண்டா என்று கேட்டார். அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் ஒரு கடிதம் எழுதித் தந்தால் அரசாங்கம் ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2—

சந்தை

***101606—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் வட்டம், காவல்கிணறு சந்திப்பில் குளிர்சாதன வசதியுடன் கூடிய காய்கனிச் சந்தை துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன். ராதாபுரம் சட்டமன்றத் தொகுதி, காவல்கிணறு பகுதியில் அமைந்துள்ள மலர் ஏல மையத்தில் உள்ள 40 கடைகளில் 20 கடைகளில் விவசாயிகள் நேரடியாக காய்கறிகள் மற்றும் பழங்களைக் கொண்டு வந்து விற்பனை செய்யவும், அவ்வளாகத்தில் அமைந்துள்ள 5 டன் கொள்ளளவு கொண்ட இரண்டு குளிர்பதனக் கிடங்குகளில் ஒரு குளிர்பதனக் கிடங்கு காய்கறிகள் சேமித்து வைத்துக்கொள்ளப் பயன்படுத்தப்படுகின்றது. கடந்த 3–11–2010 அன்று காய்கறி மற்றும் கனிகள் விற்பனை துவக்கப்பட்டுள்ளது. துவக்க விழா நிகழ்ச்சியில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. அப்பாவு அவர்களும் கலந்து கொண்டுள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.